In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.8/2020

Deposition of P.W.4

| | |
|---|---|
| Name | திரு.மணிகண்டன் |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 09th day of September 2025.

(1,3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2வது எதிரியின் வருகையின்மையை மன்னிக்க பிரிவு 355 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாளையங்கோட்டை தாலுகா திடியூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் பாளையங்கோட்டை தாலுகா நடுக்கமுடையார் கிராமத்தில் பணியில் இருந்தேன்.கடந்த 08.07.2016 அன்று நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது 2வது எதிரி வேலம்மாள் என்ற சித்ராவும், அவரது தாயார் கலாவதியும் எனது அலுவலகத்தில் ஆஜர் ஆனார்கள். பாளையங்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.676/2016 வழக்கு குறித்து சில தகவல்களை கூறவேண்டும் என்று 2வது எதிரி என்னிடம் கூறினார். மேலும் 2வது எதிரியின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருவதாகவும், தனது பெற்றோர் கோவில்பட்டியில் வசித்து வருவதாகவும் கூறினார். கோவில்பட்டியில் தனது பெற்றோரை பார்க்க சென்றபோது எதிரி அய்யாதுரையுடன் பழக்கம் ஏற்பட்டதாகவும் அந்த

பழக்கத்தின் காரணமாக தனது குழந்தையுடன் பாளையங்கோட்டையில் இருந்து அய்யாதுரையின் ஊரான தூத்துக்குடிக்கு வந்து குடும்பம் நடத்தியதாகவும், தூத்துககுடியில் வைத்து உல்லாசம் அனுபவிக்க குழந்தை இடைஞ்சலாக இருந்ததால் குழந்தை ஷியாம் ரக்சனை சுவற்றில்அடித்து எதிரி அய்யாதுரை கொலை செய்துவிட்டதாகவும் வாக்குமூலம் அளித்தார். நான் அந்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.அந்த வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் மாயாண்டியும், மந்திரம் என்பவரும் கையொப்பம் செய்தோம். எதிரி சித்ராவிடமும் அவரது தாயார் கலாவதியிடமும் கையொப்பம் வாங்கினோம். பின்னர் பாளையங்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் நடவடிக்கை எடுக்கக்கோரி மனு அளித்து நான் பதிவு செய்த வாக்குமூலத்திலும் எதிரி சித்ராவையும் ஆஜர் செய்தேன். நான் பதிவு செய்த வாக்குமூலம் **அ.சா.ஆ.3**. நான் கொடுத்த மனு **அ.சா.ஆ.4**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1,3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என அவரது வழக்கறிஞர்களால் தெரிவிக்கப்பட்டது.

**<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

08.07.2016 அன்று நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். என்னுடைய உதவியாளரும் என்னுடன் தான் இருந்தார். பணிநேரம் 24 மணிநேரம் என்றால்சரிதான். அன்றாட பணிகளை உயர்அதிகாரிகளக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால்சரிதான். எனது பணியை பொறுத்து தனி டைரி பராமரித்து வர வேண்டும் என்றால்சரிதான்.என்னுடைய

அலுவலகம் மெயின்ரோட்டில் கிடையாது என்றால் 29 வது குறுக்கு தெருவில் உள்ளது. மெயின்ரோட்டில் இருந்து அரைகிமீ தூரத்தில் உள்ளது.மாயாண்டி, மந்திரம் ஆகியோர்களில் யார் முதலில் அலுவலகத்தை திறந்தது என்றால் பொதுவாக இருவரும் சேர்ந்துதான் வருவார்கள். அன்றையதினம் யார் அலுவலகத்தை முதலில் திறந்தது என்று எனக்கு தெரியாது என்றால்சரிதான்.2 வது எதிரி வேலம்மாள் என்ற சித்ரா அலுவலகத்திற்கு வரும்போது சிகப்பு சுடிதார் போட்டிருந்தார். இந்த விவரத்தை ஆய்வாளர் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால்சரிதான். மாயாண்டி, மந்திரம் அன்றைய தினம் என்ன பணியில் இருந்தார்கள் என்றும்., பொதுமக்கள் யாரும் அலுவலகத்தில் இருந்தார்களா என்றும் ஆய்வாளர் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொல்லவில்லை. வேலம்மாள் என்ற சித்ராஅலுவலகத்திற்கு 2 மணிக்கு வந்தார். காவல் நிலையத்திற்கு 5 மணிக்கு தகவல் கொடுத்தேன். இந்த விவரங்களை ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் சொல்லியிருக்கிறேன். வழக்கின் 2 வது எதிரி இதற்கு முன்பு தெரிந்த நபர் கிடையாது என்றால்சரிதான்.2 வது எதிரிஅலுவலகத்திற்கு வந்தவுடன் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் முதலில் அரைமணிநேரத்தில் தகவல் கொடுத்துவிட்டேன். வாக்குமூலம் பதிவு செய்தபிறகு மீண்டும் தகவல் கொடுத்தேன். இந்த விவரங்களை போலீசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால்சரிதான். வழக்கிற்காக இந்த விவரங்களை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அரசு அதிகாரி என்பதால் நிறைய வழக்குகளில் சாட்சி சொல்வது வழக்கம் என்றால்சரிதான். உண்மையில் 2 வது எதிரி என்னிடம் ஆஜராகவும் இல்லை என்றாலும் எந்த ஒரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை

என்றால் சரியல்ல. 2 வது எதிரியின் தாயார் எந்த நிறத்தில் ஆடை அணிந்திருந்தார் என்று எனக்கு தெரியாது. எங்கள் அலுவலகத்தில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் ஒரு அறை தான்.எனது அலுவலகத்தில் இருந்து பாளையங்கோட்டை காவல் நிலையம் 3 கிமீ தூரத்தில் உள்ளது. 3 பேருக்குமே தனிதனி இருசக்கர வாகனம் உள்ளது என்றால்சரிதான்.ஒப்புதல் வாக்குமூலத்தை யார் கைப்பட எழுதியது என்றால் அவர் சொன்ன விவரத்தை என் கைப்பட எழுதி அவரிடம் வாசித்து காட்டி கையொப்பம் வாங்கினேன்.என்னுடைய உதவியாளர்கள் என்னுடைய வேலையை பகிர்ந்து செய்வார்கள் என்றால் முக்கியமான வேலைகளை நான் செய்வேன்.ஒப்புதல் வாக்குமூலத்தை எத்தனை மணிக்கு எழுத தொடங்கி எத்தனை மணிக்கு முடித்தேன் என்ற விவரத்தை அதில் சொல்லவில்லை என்றால்சரிதான்.எத்தனை பக்கங்கள் கொண்டது என்று சொல்லவில்லை என்றால் அதில் பக்கம் எண்ணிக்கையை குறிப்பிட்டுள்ளேன். இந்த ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யும் பணிக்காக உயர் அதிகாரியின் உத்தரவை பெறவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இது என்னுடைய பணிதான்.உயர்அதிகாரிகளுக்கு தாக்கல் செய்த அறிக்கை நகலை ஆய்வாளரிடம் கொடுத்திருக்கிறேன்.என்னுடைய தனிப்பட்ட டைரியை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால்சரிதான்.2 வதுஎதிரியும் அவரது தாயாரையும் காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லும்போது மணி 5 இருக்கும்,.இந்த விவரத்தை காவல் ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால்சரிதான்.2 வது எதிரி மற்றும் அவருடைய தாயார் யாருடைய

வாகனத்தில் காவல் நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் ஆட்டோ பிடித்து வந்தார்கள். இந்த விவரம் ஆய்வாளர் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால்சரிதான்.2 வது எதிரி பெண் என்பதால் பெண் காவலரை கேட்டு காவல் நிலையத்திற்கு பேசவில்லை என்றால்சரிதான்.தற்போது வாக்குமூலத்தை வாசித்து பார்த்துவிட்டு சாட்சியம்அளிக்கிறேன் என்றால்சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் 2 வது எதிரி என்னுடைய அலுவலகத்தில் ஆஜராகவில்லை என்றாலும், எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் ஆஜராகியிருந்தால் 2 வதுஎதிரியின் அம்மா என்ன கலரில் டிரஸ் போட்டிருந்தார் என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/—எம்.பி.முருகன்,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் — சு.கோமதி.